மாண்புமிகு திரு. செ. மாதவன்: இதை அமைக்க என்.டி.சி.-யி லிருந்து முழுத் தொகையையும் ஏற்றுக் கொள்கிறார்கள். கிட்டத்தட்ட 111 லட்சம் ரூபாய் தருவார்கள் என்று எதிர்பார்க்கிறோம். இப்போது ரூ. 83½ லட்சம் அவர்கள் கொடுப்பதாக ஒத்துக் கொண்டு விட்டார்கள். நெல் உற்பத்தி அதிகமாகயிருக்கும் மாவட்டங்களுக்கு மாத்திரம் முதலிடம் கொடுப்பது என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. எந்தெந்த இடங்கள் என்பது இன்னும் முடிவாகவில்லை.

Food Poisoning

*** 205. *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state whether 14 persons were admitted at Srivill puthur hospital in an unconscious state due to consumption of poisoned food ?**

நச்சுணவு.

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு பொதுச் சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன் :

ஸ்ரீவில்லிபுத்தூரில் நச்சுணவு சாப்பிட்டு சமீபத்தில் மகாளய அமாவாசையன்று 14 பேர் சுய நினைவிழந்து ஆஸ்பத்திரியில் சேர்க்கப் பட்டார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆம்.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, ஏதோ கண்டதைச் சாப்பிட்டு இத்தகைய சம்பவங்கள் அடிக்கடி நடக்கின்றன. சமீபத்தில் கூட பூந்தமல்லியில் இத்தகைய சம்பவம் ஏற்பட்டு 100 பேருக்கு மேல் பாதிக்கப்பட்டார்கள். ஆகவே இதற்கெல்லாம் என்ன அடிப்படையான காரணம் என்று விசாரித்து அதற்குரிய தடுப்பு முறைகளை கையாண்டு தடுக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொரு காரணம் இருக்கிறது. வில்லிபுத்தூரில் கேழ்வரகு தோசை சாப்பிட்டதால் ஏற்பட்டது. அந்த கேழ்வரகு "non-poison" என்று சொல்லப்படுகிறது. ஆங்காங்கு உள்ள நிலைமைக்குத் தகுந்தபடி நடவடிக்கை எடுக்கப்பட்டது. நேற்றிரவுகூட பிரியாணி சாப்பிட்டு பலர் பாதிக்கப்பட்டார்கள் என்று தெரிகிறது.

திரு. என். ஆர். தியாகராஜன் : கேழ்வரகு அல்ல. அதற்கு வரகு என்று பெயர். அந்த வரகை நீண்ட நாட்களுக்கு வைத்திருந்தால் அது விஷத் தன்மை உடையதாகிவிடும் என்று சொல்லப்படுகிறது. கிராமங்களில் இதை 5 வருடம், 10 வருடம் என்று வைத்திருக்கிறார்கள். கேழ்வரகு என்று குறிப்பிட்டிருந்தால் அதை வரகு என்று திருத்திக் கொள்வார்களா ? வரகு சாப்பிடக்கூடாது என்று உத்தரவு போடப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இங்கு கேழ்வரகு என்று தான் இருக்கிறது.

Dharamangalam Hospital

*** 206. *Q.*—THIRU N. R. THIAGARAJAN :—Will the Hon. the Minister for Public Health be pleased to state :**

(*a*) whether the hospital in Dharamangalam, Salem District is functioning without a Doctor ; and

(*b*) if so, when a doctor will be appointed there ?